# பள்ளிபாளையம் நகராட்சி

# நாமக்கல் மாவட்டம்

# 2024 – 2025 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## அமைப்பும், நகராட்சியும்

### 1. அமைப்பு.

பள்ளிபாளையம் தேர்வு நிலை பேரூராட்சியில் இருந்து, பின்னர் அரசாணை எண்.300 மற்றும் 301 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.24.08.2004ன் படி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டும், பின்னர் அரசு ஆணை எண்154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 09.08.2010ன் படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### 2. பரப்பளவு

பள்ளிபாளையம் நகராட்சியின் மொத்த பரப்பளவு 4.70 சதுர கிலோ மீட்டர் ஆகும்.

### 3. மக்கள் தொகை

2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி 40140 ஆகும். இக்கணக்கெடுப்பின் படி ஆண்கள் 20,200 பெண்கள் 19,940 ஆகும்.

### 4. ஆட்சி எல்லை

24.08.2004ம் தேதி முதல் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு பள்ளிபாளையம் நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. பள்ளிபாளையம் பேரூராட்சியின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் எவ்வித மாற்றமும் இன்றி நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

### 5. ஆணையாளர்

அறிவிக்கை ஆண்டில் 01.04.2024 முதல் 03.10.2025 வரை திருமதி.மு.தாமரை, 04.10.2024 முதல் 13.10.2024 வரை திருமதி.அ.வே.ரேணுகா(பொ), 14.10.2024 முதல் 10.11.2024 வரை திரு.நா.அருள் (மு.கூ.பொ) பணியாற்றினர், 11.11.2024 முதல் 31.03.2025 வரை திரு.வி.தயாளன் ஆணையாளராக பணியாற்றி வருகிறார்.

### 6. நகர்மன்றம் மற்றும் உறுப்பினர்கள்

நகர்மன்ற தேர்தல் 19.02.2022 அன்று நடைபெற்றது 22.02.2022 வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற வேட்பாளர்களுக்கு 02.03.2022 ஆம் தேதி பதவி பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. 04.03.2022 ம் தேதி காலை 9.30 மணிக்கு நகர்மன்ற தலைவர் மற்றும் பிற்பகல் 2.30 மணிக்கு தேர்தல் நடைபெற்றது. அன்று வரி

மேல்முறையீட்டு குழு நியமனக்குழு மற்றும் ஒப்பந்தகுழு ஆகியவற்றிற்கான தேர்தல் நடத்தப்பட்டு கீழ்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| வ.எண் | வார்டு எண் | பெயர் | பதவி |
|---|---|---|---|
| 1 | 21 | திரு. மோ. செல்வராஜ் | நகர்மன்ற தலைவர் |
| 2 | 3 | திரு. ப. பாலமுருகன் | நகர்மன்ற துணைத்தலைவர் |
| 3 | 9 | திரு. மு. யுவராஜ் | நியமனக்குழுவின் உறுப்பினர் |
| 4 | 4 | திரு. வெ. செந்தில் | வரிவிதிப்பு மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர் |
| 5 | 8 | திரு. கு. கோபாலகிருஷ்ணன் | வரிவிதிப்பு மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர் |
| 6 | 11 | திருமதி. அ. சுதா வெண்ணிலா | வரிவிதிப்பு மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர் |
| 7 | 16 | திருமதி. ச. சாந்தி | வரிவிதிப்பு மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர் |
| 8 | 6 | திரு. கா. சிவம் | ஒப்பந்தக்குழு உறுப்பினர் |
| 9 | 1 | திருமதி. ப. நவீனா | நகர்மன்ற உறுப்பினர் |
| 10 | 2 | திருமதி.ரா. சுசீலா | நகர்மன்ற உறுப்பினர் |
| 11 | 5 | திருமதி.ரா சுமதி | நகர்மன்ற உறுப்பினர் |
| 12 | 7 | திரு.சு. சசிகுமார் | நகர்மன்ற உறுப்பினர் |
| 13 | 10 | திருமதி.செ. மகேஸ்வரி | நகர்மன்ற உறுப்பினர் |
| 14 | 12 | திரு.ச. வினோத்குமார் | நகர்மன்ற உறுப்பினர் |
| 15 | 13 | திருமதி.அ. அமுதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 16 | 14 | திருமதி.மா. சுஜாதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 17 | 15 | திருமதி.வை. ஜெயா | நகர்மன்ற உறுப்பினர் |
| 18 | 17 | திருமதி.பூ. கவிதா | நகர்மன்ற உறுப்பினர் |
| 19 | 18 | திருமதி.மு. சம்பூர்ணம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 20 | 19 | திருமதி.சு. மங்கலம் | நகர்மன்ற உறுப்பினர் |
| 21 | 20 | திரு.சே. சரவணன் | நகர்மன்ற உறுப்பினர் |

**7. நகர்மன்றக் கூட்டங்கள்**

அ) 2024 – 2025 ம் ஆண்டு அறிக்கையாண்டில் மொத்தம் 11 நகர்மன்ற கூட்டங்கள் நடைபெற்றன. அவற்றில் 10 சாதாரண கூட்டங்களும், 1 அவசரக்கூட்டமும் நடைபெற்றுள்ளன.

ஆ) அறிக்கையாண்டில் மொத்தம் 287 கூட்டப்பொருட்கள் முடிவு செய்யப்பட்டது. மன்றப் பொருள்கள் எதுவும் முடிவு செய்யாமல் ஒத்தி வைக்கப்படவில்லை.

**8. குழுக்கள்.**

**1.நியமனக்குழு**

நியமனக்குழுவின் உறுப்பினராக திரு.மு.யுவராஜ், 9 வது வார்டு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**2.வரிவிதிப்பு மேல்முறையீட்டுக் குழு**

வரிவிதிப்பு மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்களாக திரு.வெ.செந்தில், 4வது வார்டு உறுப்பினர், திரு.கு.கோபாலகிருஷ்ணன், 8வது வார்டு உறுப்பினர், திருமதி.அ.சுதா வெண்ணிலா, 11வது வார்டு உறுப்பினர் மற்றும் திருமதி.ச.சாந்தி, 16வது வார்டு உறுப்பினர் ஆகிய நான்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

**3.ஒப்பந்தக்குழு உறுப்பினர்**

ஒப்பந்தக்குழு உறுப்பினராக திரு.கா.சிவம் 6வது வார்டு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**9. பொது**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட விபரப்படி அரசின் மானியம் கிடைக்கப்பெற்றுள்ளது.

| | ரூ.லட்சத்தில் |
|---|---|
| 15 வது மத்திய நிதிக்குழு மானியம் | 55,00,000.00 |

**10. பணியமைப்பு**

பள்ளிபாளையம் நகராட்சியில் அவ்வப்போது அரசால் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளின்படி பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

**அனுமதிக்கப்பட்ட பணியிடங்களின் விபரம் (31.03.2025)அன்றைய நிலையில்)**

| பிரிவு | பணியிடத்தின் பெயர் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்பட்ட பணியிடங்கள் | காலிப்பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| பொதுப்பிரிவு | மேலாளர் | 01 | 01 | – |
| | கணக்காளர் (உதவியாளர்) | 01 | 01 | – |
| | இளநிலை உதவியாளர் | 05 | 05 | – |
| | தட்டச்சர் | 01 | – | 01 |
| | பதிவறை எழுத்தர் | 01 | 01 | – |
| | அலுவலக உதவியாளர் | 03 | 03 | – |
| | வருவாய் ஆய்வாளர் | 01 | 01 | – |

| | | | | |
|---|---|---|---|---|
| | வருவாய் உதவியாளர் | 03 | 02 | 01 |
| பொறியியல் பிரிவு | நகராட்சி பொறியாளர் | 01 | 01 | – |
| | பணிமேற்பார்வையாளர் | 01 | – | 01 |
| | பணிஆய்வர் | 02 | – | 02 |
| | வரைபடவாளர் | 01 | – | 01 |
| | குழாய் பொருத்துநர் | 01 | 01 | – |
| | மின்பணியாளர் நிலை | 01 | 0 | 01 |
| | குழாய் திருகுநர் | 01 | 01 | – |
| நகரமைப்பு பிரிவு | நகரமைப்பு ஆய்வர் | 01 | 01 | – |
| பொது சுகாதாரப் பிரிவு | துப்புரவு ஆய்வாளர் | 01 | 01 | – |
| | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 04 | 04 | – |
| | ஓட்டுநர் | 02 | 02 | – |
| | தூய்மை பணியாளர்கள் | 35 | 24 | 11 |

**11. <u>மேலாண்மை</u>**

நகராட்சிக்கு தேவையான பலதரப்பட்ட அறிக்கைகள் மற்றும் படிவங்கள், அறிவிப்புகள் அச்சடித்த வகையில் மற்றும் ஸ்டேசனரி பொருட்கள் வாங்கியது அறிக்கையாண்டில் ரூ964396/– செலவு செய்யப்பட்டது.

**12. <u>வழக்குகள்:–</u>**

அறிக்கை ஆண்டில் ஆரம்பத்தில் 3 வழக்குகள் நிலுவையில் உள்ளது, நிதியாண்டில் எந்த வழக்குகளும் தொடரபடவில்லை. தற்போது 3 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

**13. <u>கொடிநாள்:-</u>**

இந்நகராட்சிக்கு கொடிநாள் வசூல் செய்ய 2024 – 2025 ம் ஆண்டுக்கு ரூ.300000/– குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டதில் இந்நகராட்சி மூலம் ரூ.2,50,000/– வசூல் செய்யப்பட்டுள்ளது.

**14. <u>கணினி மயமாக்குதல்:–</u>**

இந்நகராட்சியில் கணினி மூலம் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் இதர கட்டணங்கள் அனைத்தும் சேவை மையத்தில் உள்ள கணினி மூலம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

**15. <u>2024 – 2025ஆண்டு முடிய தணிக்கை முடிவு பெற்றுள்ளது (31.03.2025 அன்று)</u>**

| | | |
|---|---|---|
| 1) | ஆண்டு துவக்கத்தில் இருந்த தணிக்கைத்தடைகள் | 182 |
| 2) | அறிக்கையாண்டில் வரப்பெற்ற தணிக்கைத்தடைகள் (2024 – 2025) | 74 |
| 3) | அறிக்கையாண்டில் மொத்தம் உள்ள தணிக்கைத்தடைகள் | 256 |
| 4) | அறிக்கையாண்டில் சரி செய்யப்பட்ட தணிக்கைத்தடைகள் | 118 |

| | | |
|---|---|---|
| 5) | ஆண்டு இறுதியில் நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகள் (31.03 .2025) | 138 |

**16. இருப்பும், பொறுப்பும்**

பள்ளிபாளையம் நகராட்சியின் **31.03.2025ம்** தேதிய ஆண்டு பொறுப்பு பட்டியல் 2024 – 2025 வருடத்திய கணக்குகளில் விரிவாக காட்டப்பட்டுள்ளது.

வருவாய் பிரிவு

**1. கேட்பு, வசூல், நிலுவை.**

அறிக்கையாண்டில் 2024–2025 ஆம் ஆண்டு நடைமுறை வரியினங்கள் குறித்த கேட்பு, வசூல், நிலுவை முதலியவற்றின் விபரங்கள் (ரூபாய் இலட்சத்தில்)

| இனங்கள் | கேட்பு | வசூல் | தள்ளுபடி செய்தது | நிலுவை |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 257.73 | 237.43 | - | 20.30 |
| காலிமனைவரி | 4.78 | 3.67 | - | 1.12 |
| தொழில்வரி | 18.86 | 17.27 | - | 1.60 |
| குடிநீர் கட்டணம் | 72.65 | 66.99 | - | 5.65 |
| வரியில்லா இனங்கள் | 18.71 | 16.07 | - | 2.65 |
| குப்பை வரி | 52.01 | 48.69 | - | 3.33 |
| **மொத்தம்** | **424.75** | **390.11** | - | 34.64 |

**2. தொழில்வரி**

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 93ன் கீழ் அனைத்து நிறுவனங்கள், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள், வங்கிகள் ஆகியவைகளில் பணிபுரியும் உரியவர்களிடமிருந்து தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

**3 . சொத்துவரி குறைப்பு மனுக்கள்**

சொத்துவரி குறைப்பு செய்யும் மனுக்கள் (ரிவிசன் பெட்டிசன்) ஏதும் பெறப்படவில்லை.ஆதலால் அதன்பேரில் வரித்தொகைகள் குறைக்கப்படவில்லை (விதி 11ஐ அரசினரால் நீக்கம் செய்யப்பட்டுள்ளது).

**4. சொத்துவரி மேல்முறையீட்டு மனுக்கள்**

மேல்முறையீட்டு மனுக்கள் நடப்பு ஆண்டில் ஏதும் பெறப்படவில்லை.

**5. காலி நிலவரி பிரிவு 91 (3)ன்படி**

இந்நகராட்சி எல்லைக்குள் உள்ள காலி நிலங்களுக்கு அரையாண்டிற்கு முதலீட்டு மதிப்பின் பேரில் காலி நிலவரியாக **1/2** விழுக்காடு கீழ்க்கண்ட விபரப்படி விதிக்க இந்நகர்மன்றம் தீர்மானம் எண்.282 நாள்.**16.09.98**ல் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.மேற்சொன்ன விழுக்காடுகளின்படி **1.10.98** முதல் வரி நிர்ணயம் செய்யப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறது.

| | | |
|---|---|---|
| 1.பொது காரியம் | – | 4விழுக்காடு |
| 2.தண்ணீர் மற்றும் வடிகல்களுக்காக | – | |
| 1. தண்ணீர் | – | 1 விழுக்காடு |
| 2. வடிகால் | – | 1 விழுக்காடு |
| 3.விளக்கு வசதிக்காக | – | 1 விழுக்காடு |
| 4.துப்புரவுக்காக | – | வரி5 விழுக்காடு |
| மொத்தம் | – | 12 விழுக்காடு |

**6. வரியில்லா வருவாய் இனங்கள்**

சந்தைகள், ஆடு அடிக்கும் தொட்டிகள் முதலியவற்றிலிருந்து கடந்த 3 ஆண்டுகளில் கிடைத்த வருமானம் பின்வருமாறு

| வ.எண். | விபரம் | 2022-2023 | 2023-2024 | 2024-2025 |
|---|---|---|---|---|
| 1 | வாரச்சந்தை | 4,56,000 | 4,78,800 | 5,02,740 |
| 2 | பாரவண்டி | 1,15,500 | 1,21,275 | 1,21,500 |
| 3 | ஆடு அடிக்கும் தொட்டி | 1,33,455 | 1,40,128 | 1,48,050 |
| 4 | தினசரி சந்தை | 3,16,575 | 3,32,404 | 3,32,400 |
| 5 | கட்டணக் கழிப்பிடங்கள் | 7,43,960 | 8,09,051 | 7,35,669 |
| 6 | பெட்டி கடை மற்றும் ரேசன் கடை | 3,21,033 | 83,024 | 38,088 |

**7. <u>சந்தைகள்</u>**

அறிக்கையாண்டின் வாரச்சந்தை இரண்டும், தினசரி சந்தை ஒன்றும் இயங்கி வருகிறது.

**8. <u>பேரூந்து நிலையம்</u>**

இந்நகராட்சிப் பகுதியில் பேருந்து நிலையம் அமைக்கப்படவில்லை.

**9. <u>மீன்மார்க்கெட்</u>**

இந்நகராட்சிப் பகுதியில் மீன்மார்கெட் ஏதும் அமைக்கப்படவில்லை.

**10. <u>பலன்தரத்தக்க இனம்</u>**

பலன்தரத்தக்க மரங்கள் ஏதுமில்லை

**<u>பொறியியல் பிரிவு</u>**

**1. <u>அலுவலர்கள்</u>**

பள்ளிபாளையம் நகராட்சியில் 01.04.2024 முதல் 31.03.2025 வரை திருமதி.அ.வே.ரேணுகா பள்ளிபாளையம் நகராட்சி பொறியாளராக உள்ளார். நடைபெறும் திட்டப்பணிகளை அளவு

செய்தல் வேலைக்கு 01.04.2024 முதல் 31.03.2025 வரை திரு.ப.சந்தோஷ் பணி மேற்பார்வையாளராக பணி அமர்த்தப்பட்டுள்ளார்.

**2. குடிநீர் வழங்குதல்**

இந்நகராட்சியில் காவிரி ஆற்றிலிருந்து நீர் எடுத்து சுத்திகரிக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போதுள்ள குடிநீர் திட்டத்தின் கீழ் 254 பொது குடிநீர் குழாய்களும், 5940 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகளும் உள்ளது.குறைந்தபட்சம் மாதம் ரூ. 104/–ம் வீட்டு உபயோகத்திற்கும், கடைகளுக்கு வழங்கப்படும் இணைப்புகளுக்கு குறைந்தபட்சம் மாதம் ரூ.204/– வசூல் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நகராட்சி பகுதி மக்களுக்குதினந்தோறும் 4.57 மில்லியன் லிட்டர் வழங்கப்பட்டுவருகிறது. மேலும் ஒரு நாள் ஒன்றுக்கு ஒரு நபர் ஒருவருக்கு 110 எல்.பி.சி.டி வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

**ஆழ்துளை குழாய் கிணறுகள்**

இந்நகராட்சி எல்லைக்குள் அறிக்கையாண்டில் 94 மினிபவர் பம்புகளும் இயங்கி வருகின்றன. அவையாவும் பழுதின்றி நல்ல முறையில் இயங்கி வருகின்றது.

**புதிய தலைமை நீரேற்று நிலையம் (kfw Water)**

அ) தலைமை நீரேற்று நிலையம் சமயசங்கிலி நீர்மின்திட்ட தடுப்பணைக்கு மேல் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு 60 குதிரை வேகத்திறன் கொண்ட 2 டர்பைன் மோட்டார்கள் உள்ளது.

ஆ). புதிய சுத்திகரிக்கப்பட்ட நீரேற்று நிலையம் பள்ளிபாளையம் அக்ரஹாரம் பகுதியில் அமைந்துள்ளது. இங்கு 60 குதிரை வேகத்திறன் கொண்ட இரண்டு சென்டிரிபிகல் மோட்டார்களும் 40 மற்றும் 50 குதிரை திறன் கொண்ட இரண்டு மின் மோட்டர்களும் உள்ளது. 7.50எம்.எல்.டி கொள்திறன் கொண்ட 6 மணல்படுகை வடிகட்டும் தொட்டிகளும் உள்ளது.

**மேல்நிலைத்தொட்டிகள்**

| Sl.No | Capacity of O.H.T (In Lakhs) | No. of O.H.T (In Lakhs) | Total Capacity (In Lakhs) |
|---|---|---|---|
| 1 | 3.00 | 2 | 6.00 |
| 2 | 3.75 | 1 | 3.75 |
| 3 | 1.00 | 1 | 1.00 |
| 4 | 5.00 | 2 | 10.00 |
| 5 | 4.00 | 1 | 4.00 |
| **Total** | | **7** | **24.75** |

நகரில் மொத்தம் நாளொன்றுக்கு 24.75 லட்சம் லிட்டர் இரண்டு முறை மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் ஏற்றப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இது தவிர ஆழ்துளை கிணறு மற்றும் மினிபவர் பம்பு மூலம் நாளொன்றுக்கு 7.50 லட்சம் லிட்டர் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**கடன்கள்**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட தலைப்பின் கீழ் அசல் மற்றும் வட்டி செலுத்திய விபரம்

| திட்டம் | ஆரம்ப இருப்பு | | நடப்பு ஆண்டில் செலுத்தப்பட்டது | | நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | அசல் | வட்டி | அசல் | வட்டி | அசல் | வட்டி |
| குடிநீர் அபிவிருத்தி திட்டம் | 414.33 | - | 20.33 | 28.01 | 394.00 | - |
| **மொத்தம்** | 414.33 | - | 20.33 | 28.01 | 394.00 | - |

## 3. விளக்குகள் அமைப்பு.

1). உயர் கோபுர விளக்கு 7
2) எல்.இ.டி 1386

மொத்தம் 1393

மின்விளக்குகள் பராமரிப்பிற்காக அறிக்கை ஆண்டில் ரூ.87,22,259/–செலவு செய்யப்பட்டுள்ளது.

## 4. சாலைகள்

இந்நகராட்சியின் கீழ்க்கண்ட விபரப்படி சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

**நகராட்சி சாலைகள்**

| | | |
|---|---|---|
| தார் சாலைகள் | – | 20.460 கி மீ. |
| சிமெண்ட் சாலைகள் | – | 13.83 கி.மீ. |
| பேவர் பிளாக் சாலைகள் | – | 0.848 கி.மீ |
| | | 35.146 கிமீ. |

**தேசிய நெடுஞ்சாலைகள்**

நகராட்சி எல்லைக்குள் தேசிய நெடுஞ்சாலைத் துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகள் ஏதுமில்லை.

**மாநில நெடுஞ்சாலைகள்**

நகராட்சி எல்லைக்குள் தமிழக அரசு நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்படும் சாலையின் நீளம் 6.00 கி.மீ. ஆகும்.

அறிக்கையாண்டில் சாலைகள் அமைப்பு மற்றும் அதன் பராமரிப்பிற்கான செலவு

| தார்சாலை | சாக்கடை | C.C. |
|---|---|---|
| ரூ.967,00,000/– | – | ரூ.239,00,000/– |

**5. கட்டிடப்பணிகள்**

அறிக்கையாண்டில் முதலீட்டு வேலைகளின் கீழ் செலவிடப்பட்ட தொகை ரூ.78,19,000/– ஆகும். சென்ற ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ.36,28,000/– ஆகும்.

**6. அம்மா உணவகம்**

பள்ளிபாளையம் நகராட்சியில் புதன் சந்தை பகுதியில் அம்மா உணவகம் மூலம் பொதுமக்களுக்கு நல்ல முறையில் சுகாதாரமான முறையில் உணவு வழங்கப்பட்டு வருகிறது. உணவு பாதுகாப்புத் துறையினர் மூலம் சான்றளிக்கப்பட்டுள்ளது.

**7. முதலமைச்சர் காலை உணவு திட்டம்**

பள்ளிபாளையம் நகராட்சி பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான மூன்று துவக்கப்பள்ளிகள் மற்றும் அருகில் உள்ள பஞ்சாயத்து மற்றும் பேரூராட்சிக்குட்பட்ட ஆறு பள்ளிகள் என மொத்தம் 9 பள்ளிகளில் முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டம் 29.05.2023ம் தேதி தொடங்கப்பட்டு பள்ளி குழந்தைகளுக்கு தரமான காலை உணவு வழங்கப்பட்டுவருகிறது.

**8. இளைப்பாறும் விடுதிகள், சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்.**

இந்நகராட்சியில் இளைப்பாறும் விடுதிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை. சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள் எதுவும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

**9. கல்வி வசதி**

இந்நகராட்சியில் 3 துவக்கப்பள்ளிகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**10. உயர்நிலைப்பள்ளிகள்**

உயர்நிலைப்பள்ளிகள் ஏதும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

**11. மேல்நிலைப்பள்ளிகள்**

இந்நகராட்சியால் மேல்நிலைப்பள்ளிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.ஒரு அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியும், ஒரு மகளிர் மேல்நிலைப்பள்ளி ஆகியவை இந்நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது.

12. தனியார் பள்ளிகள், பொது நூல்நிலையம்

இந்நகராட்சியால் நூலகம் படிப்பகம் ஏதும் பராமரிக்கப்படவில்லை. நாமக்கல் மாவட்ட நூலக ஆணைக்குழுவினரால் பொது நூலகம் நடத்தப்பட்டு வருகிறது.அறிக்கையாண்டில் வசூல் செய்யப்பட்ட நூலக வரித் தொகையில் நூலக ஆணைக்குழுவிற்கு அறிக்கையாண்டில் தொகை ஏதும் செலுத்தப்படவில்லை .

13. பாலர்பள்ளி, சத்துணவுத்திட்டம்

இந்நகராட்சியின் மூலம் பாலர் பள்ளி, சத்துணவுக் கூடம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

14. முதியோர் சத்துணவுத்திட்டம்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியின் மூலம் முதியோர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் நகர பகுதியில் வசிக்கும் முதியவர்களுக்கு சத்துணவு ஏதும் வழங்கப்படவில்லை.

15. பள்ளி சத்துணவுத்திட்டம்

சத்துணவுத் திட்டம் எதுவும் இந்நகராட்சியால் பராமரிக்கப்படவில்லை.

16. பொது வானொலி

அறிக்கையாண்டில் இந்நகராட்சியால் வானொலிகள் ஏதும் பராமரிக்கப்படவில்லை.

17. பொதுதொலைக் காட்சி

அறிக்கையாண்டில் இந்நகராட்சியால் பொது தொலைக்காட்சி பெட்டிகள் வசதி ஏதும் பராமரிக்கப்படவில்லை.

18. சாக்கடை

பாதாள சாக்கடை திட்டம் தற்போது இந்நகராட்சியில் இல்லை. கழிவுநீர் நகரில் உள்ள மழை நீர் வடிகால் மூலம் கொண்டு செல்லப்பட்டு வருகின்றன.

19. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி ஒதுக்கீடு திட்டப்பணிகள் 2024 – 2025

இத்திட்டத்தின் கீழ் 3 பணிகள் கான்கீரிட் சாலை ரூ.40.50 இலட்சம் மதிப்பீட்டில் 3 பணிகள் எடுக்கப்பட்டு 1 பணி முடிக்கப்பட்டு, மீதமுள்ள பணிகள் நடைபெற்று வருகிறது. மற்றும் 2 பணிகள் ரூ.4.90 இலட்சம் மதிப்பீட்டில் பணி நடைபெற்று வருகிறது.

20. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி ஒதுக்கீடு திட்டப்பணிகள் 2024 – 2025

இத்திட்டத்தின் கீழ் 5 பணிகள் ரூ.87.90 இலட்சத்திற்கு பணிகள் எடுக்கப்பட்டு, 3 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 2 பணிகள் நடைபெற்ற வருகிறது. மற்றும் 6 பணிகள் ரூ.50.10 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் எடுக்கப்பட்டு 3 பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 3 பணிகள் நடைபெற்று வருகிறது.

21. (15 வது நிதி குழு) சுகாதார மான்யம் 2023– 2024

இத்திட்டத்தின் கீழ் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிட பணி ரூ.120.00 இலட்சத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

அ) (15 வது மத்திய நிதி குழு) 2023– 2024

1). இத்திட்டத்தின் கீழ் 2 படித்துறை பணிகள் ரூ.83.00 இலட்சத்திற்கு எடுக்கப்பட்டு 1 பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணி முன்னேற்றத்தில் உள்ளது.

ஆ) (15 வது மாநில நிதி குழு ) 2023– 2024

இத்திட்டத்தின் கீழ் 17 பணிகள் ரூ.119.00 இலட்சத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

22. AMRUT 2.0 குடிநீர் மேம்பாட்டு திட்டம் 2022–23

இத்திட்டத்தின் கீழ் ரூ.1777.00 இலட்சத்திற்கு 45 கி.மீ பகிர்மான குழாய் பதிக்கும் பணிகள் எடுக்கப்பட்டு தற்போது 90% சதவீதம் பணிகள் முடிக்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

23. தூய்மை இந்தியா திட்டம் 2022–23 (U)

இத்திட்டத்தின் கீழ் ரூ.1079.00 இலட்சத்திற்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு 2 பணிகள் எடுக்கப்பட்டு, 1 பணி நடைபெற்று வருகிறது.

பொதுசுகாதார பிரிவு

1. அமைப்பும்

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளர் 1 நபர் மற்றும் துப்புரவு மேற்பார்வையாளர்கள் 4 நபர்கள் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

2. துப்புரவு ஆய்வாளர்

அறிக்கையாண்டில் 01.04.2024 முதல் 31.03.2025 வரை திரு.த.பன்னீர்செல்வம் அவர்கள் துப்புரவு ஆய்வாளராக பணியாற்றி வருகிறார்.

3. கருவிகள், இயந்திரங்கள் மற்றும் பண்டகங்கள்

துப்புரவு பணிகளுக்கு தேவையான கருவிகள் இருப்பில் உள்ளது. மேலும் பொது சுகாதாரப் பணிகளுக்கு தேவையான மருந்துகள் அவ்வப்போது தேவைக்கேற்ப கொள்முதல் செய்து தினந்தோறும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

4. உடல்நலம் குறித்த பிரச்சாரம்

அறிக்கையாண்டில் பொதுசுகாதார பிரிவின் கீழ் நகராட்சியில் பணிபுரியும் சுகாதார பணியாளர்களால் பொது சுகாதாரத்தினை பேணிக்காத்திட வேண்டிய நடவடிக்கை பற்றி பிரச்சாரம் செய்யப்பட்டது. டெங்கு, சிக்கன்குன்யா, காலரா, அம்மைநோய், பன்றிக்காய்ச்சல், லெப்டோ பைரோஸ்சிஸ் சுற்றுப்புற சுகாதாரம் ஈக்கள் மற்றும் கொசுவினால் ஏற்படும் நோய்கள் குறித்து பொதுமக்களுக்கு துய்மை இந்தியா திட்டம் இயக்கத்தின் கீழ் பணிபுரியும் பரப்புரையாளர் ,துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும்

சுகாதார பணியாளர்களால் அவ்வப்போது விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.குப்பைகள், கட்டிட இடிப்பாட்டு கழிவுகள் மற்றும், தென்னை ஓடுகள் முதலியவற்றை தெருக்களின் சாலையோரங்களில் மற்றும் மழைநீர் வடிகால்களில் கொட்டக்கூடாது என்று ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. டீ கடைகள் , ஓட்டல்கள்,பொது சுகாதார முறையினை பின்பற்றி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி அறிவுறுத்தப்பட்டது.

**5. பிறப்பு விகிதம், மகப்பேறு நிவாரணம்**

அறிக்கையாண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த பிறப்புகள் 248 ஆகும்.பிறப்பு விகிதம் 8.34 ஆகும். பிறப்பு இறப்பு பதிவுகள் துப்புரவு ஆய்வாளரால் கவனிக்கப்பட்டு வருகிறது.

**6. இறப்பு விகிதம், கொள்ளை நோய்கள்**

அறிக்கையாண்டில் பதிவான இறப்புகள் 223 இறப்பு விகிதம் 5.84 , காலரா அம்மை போன்ற பல்வேறு நோய்கள் மூலம் இறப்பு விகிதம் ஏதும் இல்லை.

| | | |
|---|---|---|
| 1.காலரா | – | – |
| 2.அம்மை | – | – |
| 3.பிளாக் | – | – |
| 4.காய்ச்சல் | – | – |
| 5.மலேரியா | – | – |
| 6.வாந்திபேதி | – | – |
| 7.பிற காரணங்கள் | – | 223 |
| மொத்தம் | – | 223 |

**7. காலரா, வாந்திபேதி நோய்கள்**

அறிக்கையாண்டில் ஏதும் இல்லை.தடுப்பு நடவடிக்கைக்களுக்காக ஏதும் நடப்பு ஆண்டில் செலவிடப்படவில்லை.

**8. அம்மை(வைசூர்) ஒழிப்புத்திட்டம்**

அரசினரால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட காரணத்தால் இத்திட்டம் நடைமுறையில் இல்லை.

**9. மலேரியா காய்ச்சல்**

மலேரியா தொற்றால் பாதிக்கப்பட்டவர் எவரும் இல்லை.

**10. மலேரியா ஒழிப்புத்திட்டம்**

மலேரியா ஒழிப்புத் திட்டம் இந்நகராட்சியில் அமலில் இல்லை.

**11. தேசிய மலேரியா ஒழிப்புத்திட்டம்**

தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டம் இந்நகராட்சியில் அமலில் இல்லை

**12. துப்புரவு**

அறிக்கையாண்டில் நாள்தோறும் காலை, மாலை ஆகிய இருமுறை தெருக்கள் கூட்டப்பட்டு, சாக்கடைகள் சுத்தம் செய்யப்பட்டு வரபெற்றுவருகின்றது. இந்நகராட்சியில் உரக்கிடங்கு இரண்டு உள்ளது. சேகரம் செய்யப்பட்ட திட மற்றும் திரவகழிவுகளை குப்பைகளை கீழ்கண்டுள்ளவாறு உரக்கிடங்கிற்கு எடுத்துச்செல்ல பொது சுகாதார வாகனங்கள் உபயோகப்படுத்தபடுகின்றது.

| வ.எண் | வாகன விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தள்ளுவண்டிகள் | 30 |
| 2. | பேட்டரி வண்டிகள் | 17 |
| 3. | LCV | 6 |
| 4. | கனரக டிப்பர் லாரி | 2 |
| 5. | கழிவு நீர் உறிஞ்சு வாகனம் | 1 |
| 6. | மினிஎர்த் மூவர் | 1 |

**13. வீட்டு மல அறைகள்**

அறிக்கை ஆண்டில் இத்திட்டம் அமுலில் இல்லை.

**14. கலப்பு உரம்**

இந்நகராட்சியில் இரண்டு நுண்உரசெயலாக்க மையங்கள் அமைக்கப்பட்டு அதில் தினசரி 4.20 மெ.டன் மக்கும் கழிவுகளை தினசரி அரைக்கப்பட்டு உள்ளூர் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உணவு கழிவுகளிலிருந்து மின்சாரம் 5 TPD ல் தயாரிக்கும் திட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

**15. உணவுப்பண்டங்கள் கலப்படம்**

உணவு கலப்பட தரக்கட்டுப்பாட்டு நிர்ணயம் மூலம் தனியாக ஒரு உணவு பாதுகாப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு தற்போது உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

**16. அபாயகரமானதும், அருவருக்கத்தக்கதுமான தொழில்கள்**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் துப்புரவு ஆய்வாளர், அவர்களால் வாணிபங்கள் மற்றும் தொழில்கள் நடைபெறும் இடங்கள் அவ்வப்போது பார்வையிடப்பட்டுள்ளது. உணவு கலப்பட தடைச்சட்டம் நடைமுறையில் அமுலில் உள்ளது. உரிமையாணை நிபந்தனைகள் கண்டிப்பான முறையில் அமுல் செய்யப்பட்டது.மேற்படி உரிமையாணைத் தொகையாக அறிக்கையாண்டில் ரூ.1079054/– வரவு வரப்பெற்றுள்ளது.

**17. பொது மருத்துவமணை**

இந்நகரில் அரசினர் மருத்துவமனை ஒன்றும், அரசு நகர்புற ஆரம்ப சுகாதாரநிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது. இந்நகரில் அரசினர் மருத்துவமனை தவிர தனியார் மருத்துவமனைகளும் மகப்பேறு மருத்துவமனைகளும் உள்ளன. இந்நகராட்சியால் யாதொரு மருத்துவமணையோ, மகப்பேறு மருத்துவமணையோ நகராட்சியின் பராமரிப்பில் இல்லை.

**18. திருவிழாக்கள்**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட திருவிழாக்கள் எதுவும் இல்லை.அறிக்கையாண்டில் உள்ளூரில் அருள்மிகு ஓங்காளியம்மன் கோவில்

திருவிழா, கண்ணனூர் மாரியம்மன் கோவில் திருவிழா, அக்னி மாரியம்மன் கோயில் திருவிழா, ஆடிப்பெருக்கு விழா மற்றும் மாரியம்மன் பண்டிகை நடைபெற்றது. இத்திருவிழாவின்போது முறைப்படி சிறப்பு துப்புரவு பணிகளும், வீதிகளில் கிருமிநாசினி பவுடர்கள் பயன்படுத்தி சுத்தம் செய்யப்பட்டு சுகாதாரமான முறையில் திருவிழா நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

**19. வீட்டு வசதிகளும் / இதர வசதிகளும்**

அறிக்கையாண்டில் பொது சுகாதார பணியாளர்களுக்கு ஆண்டுதோறும் 2 சீருடைகள் ஒரு ஜதை காலணியும் மற்றும் கடைநிலை ஊழியர்களுக்கு இரண்டு செட் சீருடைகள் மட்டும் இலவசமாக வழங்கப்பட்டது.

**20. பொது நலமும், தீ பாதுகாப்பும்**

அறிக்கையாண்டில் இந்நகராட்சியில் வெறிநாய்கடியினால் இறப்பு ஏதும் இல்லை.நகராட்சி அலுவலகத்தில் தீத்தடுப்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**நகரமைப்பு பிரிவு**

**1. கட்டிட விண்ணப்பங்கள்**

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட கட்டிட விண்ணப்பங்கள் வரப்பெற்று அனுமதி வழங்கப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1.வரப்பெற்ற விண்ணப்பங்கள் எண்ணிக்கை | – | 42 |
| 2.அனுமதி அளிக்கப்பட்டவை | – | 39 |
| 3.நிராகரிக்கப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | – | 3 |

**2. நகர நில அளவை**

இந்நகராட்சியில் நில அளவை பணிகள் நாளதுவரை நடைபெறவில்லை. எனவே ஆவணங்கள் எதுவும் நகராட்சி வசம் ஒப்படைக்கப்படவில்லை. அறிக்கை ஆண்டில் எவ்வித ஆக்கிரமிப்பு கட்டணமும் வசூல் செய்யப்படவில்லை.

**3. மரம் நடுதலும், பூங்காக்களும்**

சென்ற ஆண்டில் இந்நகராட்சியில் 500 புதிய மரக்கன்றுகள் நடப்பட்டன. நடப்பு ஆண்டில் 150 மரக்கன்றுகள் நடப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. நகராட்சியில் பூங்காக்கள் எதுவும் இல்லை.

V. [signature] 23/06/25

ஆணையாளர்,
பள்ளிபாளையம் நகராட்சி

கை.ஓ. 23/06/25